**வாடகை கட்டுப்பாட்டு தீர்ப்பாயம்/முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,**
வாடகை கட்டாள்கையர்/
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

2024–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.2/2021**
**இன்**
**வாடகை கட்டுப்பாட்டு அசல் மனு எண்.2/2019**

1. திருமதி. ரசியா பேகம் . . . மனுதாரர்/1வது எதிர்மனுதாரர்

/ எதிர் /

1. திருமதி. மைதீன் பீவி
2. ஆரிப்
3. திருமதி.ஷஃப்வானா . . . எதிர்மனுதாரர்கள்/ மனுதாரர் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 25.06.2024ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர்/ மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள்/2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அஜராகாததால் 22.03.2022 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1வது எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, இருதரப்பு சாட்சிய சான்றாவணங்கள், அசல்

மனு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனுதாரர்/1 வது எதிர்மனுதாரரால் காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன் கீழ், R.C.O.P.No.2/2019 ல் கடந்த 31.01.2020 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக் கோரி மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 390 நாள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுதாரர்/1 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u> :**

இம்மனுவின் மனுதாரர் R.C.O.P.No.2/2019 ல் 1 வது எதிர்மனுதாரர் என்றும், 1 ம் எதிர்மனுதார்/மனுதார் மேற்படி R.C.O.P.No.2/2019 னை மனு பட்டிகை சொத்திலிருந்து எதிர்மனுதாரர்களை காலி செய்ய வேண்டி தாக்கல் செய்தார் என்றும், R.C.O.P.No.2/2019 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி மனுதாரரை மனு தபசில் சொத்திலிருந்து காலி செய்ய E.P.No.19/2020 லிருந்து 10.02.2021 ல் நீதிமன்றத்தில் ஆஜராகும் படி அறிவிப்பு 08.02.2021 அன்று மனுதாரருக்கு கிடைத்தது என்றும், மனுதாரர் E.P.No.19/2020 ல் வழக்கறிஞர் மூலமாக ஆஜரானார் என்றும், மனுதாரருக்கு மனுவை படித்த பிறகே 1 வது எதிர்மனுதாரர் தபசில் கட்டிடத்தின் உரிமையாளர் என்று R.C.O.P.No.2/2019 தாக்கல்செய்து ஒருதலைபட்ச உத்தரவை பெற்றுள்ளார் என்ற விபரம் தெரிய வந்தது என்றும், மனுதாரர் R.C.O.P.No.2/2019 ன் மனு, ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நகல் வேண்டி 12.02.2021 ல் இந்நீதிமன்றத்தில் விண்ணப்பித்தார் என்றும், நகலானது, மனுதாரருக்கு 20.03.2021 ல் கிடைத்தது என்றும், 10.03.2021 முதல் 24.03.2021 வரை மனுதாரருக்கு உடல்நிலை

சரியில்லாத காரணத்தால் சிகிச்சை பெற்று வந்ததால் வழக்கறிஞரை உடனடியாக அணுக முடியவில்லை என்றும், R.C.O.P.No.2/2019 சம்மந்தமான எந்த அறிவிப்பும் மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கவில்லை என்றும், R.C.O.P.No.2/2019 ன் எதிர்மனுதார்கள் ஆஜராக மாலைமலர் அல்லது தினமலர் நாளிதழில் அறிவிப்பினை விளம்பரம் செய்ய இந்நீதிமன்றத்தால் 28.06.2019 ல் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், 09.08.2019 ல் மனுதாரர் அழைத்தும் ஆஜராககாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக 31.01.2020 அன்று ஒருதலைபட்ச உத்தரவு R.C.O.P.No.2/2019 ல் பிறப்பிக்கப்பட்டது என்றும், மனுதாரரின் மூத்த மகன் அஹமது சுலைமான் நியூசிலாந்து நாட்டில் வேலை பார்க்கிறார் என்றும், மனுதாரர் நியூசிலாந்து நாட்டிற்கு செல்ல சென்னை விமான நிலையத்தில் 01.09.2018 அன்று விமானம் ஏறி பயணித்து 02.09.2018 அன்று நியூசிலாந்து நாட்டிற்கு சென்றார் என்றும், நியூசிலாந்து நாட்டில் 25.05.2019 வரை மனுதாரரின் மகன் மற்றும் மருமகளுடன் தாமசித்து விட்டு 25.05.2019 அன்று நியூசிலாந்து மலேஷியா விமானத்தில் ஏறி 26.05.2019 அன்று சென்னை வந்து சேர்ந்தார் என்றும், R.C.O.P.No.2/2019 1ம் எதிர்மனுதார்/மனுதாரரால் 14.11.2018 அன்று தாக்கல் செய்யப்பட்டு அதன்பிறகு திருப்பப்பட்டு பின்பு 30.11.2018 ல் திரும்ப தாக்கல் செய்யப்பட்டு 09.02.2019 ல் மனு கோப்பில் எடுக்கப்பட்டு முதல் வாய்தா 12.03.2019 ல் ஒத்திவைக்கப்பட்டு, 12.03.2019 ல் உள்ளூர் விடுமுறை என்பதால் 13.03.2019 அன்று ஒத்தி வைக்கப்பட்டு எதிர்மனுதாரர்களுக்கு மீண்டும் அறிவிப்பு அனுப்ப (Fresh notice) உத்தரவிட்டு மனுவானது 24.04.2019 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், 24.04.2019 ல் steps என்று 28.06.2019 மனுவானது ஒத்தி வைக்கப்பட்டது என்றும், 09.02.2019 முதல் 25.05.2019 வரையிலான காலகட்டங்களில் மனுதாரர் இந்திய நாட்டில் இல்லை என்றும், நீதிமன்றத்திலிருந்து மனுதாரருக்கு R.C.O.P.No.2/2019 ன் அறிவிப்பு கிடைக்கவில்லை என்றும், 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் நீதிமன்றத்திலிருந்து

முறையாக அறிவிப்பு அனுப்பாமல் மனுதாரர் இல்லை என்பதை அறிந்தே R.C.O.P.No.2/2019 தாக்கல்செய்து அவசரமாக வழக்கு நடத்தி ஒருதலைபட்ச உத்தரவினை பெற்றுள்ளார் என்றும், மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரர்/ மனுதாருக்கும் இடையே எந்தவிதமான வாடகை ஒப்பந்தமும் இல்லை என்றும், எனவே, காலவரையறைச்சட்டம் பிரிவு 5–ன் கீழ், R.C.O.P.No.2/2019 ல் கடந்த 31.01.2020 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக் கோரி மனுவை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 390 நாள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>1வது எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் 1வது எதிர்மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட சங்கதிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைத் தவிர ஏனையவை மறுக்கப்படுகிறது என்றும், இம்மனு பொருண்மைகளின் படியும் சட்டப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவின் மனுதாரரை மனு பட்டிகை கட்டிடத்திலிருந்து வெளியேற்ற வேண்டி R.C.O.P.No.2/2019 தாக்கல் செய்யப்பட்டது என்றும், மேற்படி R.C.O.P.No.2/2019 ல் 31.01.2020 அன்று இம்மனுவின் 1வது எதிர்மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், எனவே எதிர்மனுதாரர் மேற்படி தீர்ப்பினை நிறைவேற்ற வேண்டி மனு தாக்கல் செய்து மாண்புமிகு நீதிமன்றத்தால் 09.09.2020 ல் E.P.19/2020 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றும், 10.02.2021 அன்று மனுதாரர் /1ம் எதிர்மனுதாரர் E.P.19/2020 ல் அவருடைய வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாருக்கு எதிர்மனுதாரர் வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளர் என்பது 2015 லிருந்து தெரியும் என்றும், 1வது எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் உரிமையாளர் வாடகைதாரர் என்ற உறவு

இருந்து வந்தது என்றும், மேலும் அவர்கள் வாய்மொழி வாடகை ஒப்பந்தத்தில் கூறியுள்ள நிபந்தனைகளை மீறி வழக்கு பட்டிகை கட்டிடத்தை கீழ் வாடகைக்கு கொடுத்தது மட்டுமல்லாமல் வேண்டும் என்றே 1வது எதிர்மனுதாரருக்கு தர வேண்டிய வாடகை தொகையையும் கொடுக்கவில்லை என்றும், எனவே 1வது எதிர்மனுதாரர் மனுதாரரை வழக்கு பட்டிகை கட்டிடத்திலிருந்து வெளியேற்ற முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றும், ஆனால், மாண்புமிகு நீதிமன்றம் ஒருதலைபட்சமாக எதிர்மனுதாரருக்கு சாதகமாக R.C.O.P.No.2/2019 ல் உத்தரவு வழங்கியது என்றும், மனுதாரர் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும், மேலும் கடந்த 10.03.2021 முதல் 24.03.2021 வரை உடல் நிலை சரியில்லாமல் வீட்டில் சிகிட்சை பெற்று வந்ததால் நீதிமன்றத்தை உரிய நேரத்தில் அணுக முடியவில்லை என்பது 1 வது எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது என்றும், கடந்த 28.06.2019 அன்று R.C.O.P.No.2/2019 ல் இந்நீதிமன்றத்தால் பதிலீடு சார்பு மூலமாக அறிவிப்பு அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, R.C.O.P.No.2/2019 ன் எதிர்மனுதாரர்கள் 09.08.2019 இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 31.01.2020 ல் ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டது என்றும், இம்மனுவின் மனுதாரருக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என கூறுவது உண்மையல்ல என்றும், மனுதாரர் வழக்கு நடவடிக்கையை கண்காணித்து கொண்டு வேண்டும் என்றே ஒருதலைபட்சமாக இருந்துவிட்டு 1 1/2 ஆண்டுகள் கழிந்த பிறகு 1வது எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்த வேண்டி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார் என்றும், மனுதாரின் மூத்த மகன் அகமத் சுலைமான் நியூஸிலாந்தில் வேலை பார்க்கிறார் என்பதும், மனுதாரர் கடந்த 01.09.2018 அன்று சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு 02.09.2018 நியூசிலாந்துக்கு சென்றடைந்து மீண்டும் மனுதாரர் 26.05.2019 அன்று சென்னைக்கு வந்தது குறித்த விபரங்கள் எதுவும் 1வது எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும், மனுதாரர் மேற்படி விபரங்களை நிரூபிக்க

எந்த ஆவணங்களையும் இந்நாள் வரை மாண்புமிகு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது 1வது எதிர்மனுதாரரால் நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் 1வது எதிர்மனுதாரரை துன்புறுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வேண்டும் என்றே 390 நாட்களுக்கு பிறகும் கூட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் பொய்யான காரணங்கள் கூறி இந்த காலதாமத மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள படி மனுதாரரின் மகன் நியூசிலாந்தில் இருப்பதாக அனுமானித்து கொண்டாலும் மனுதாரரின் இளைய மகன் முகமது சாகின் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளுடன் வழக்கு பட்டிகை சொத்தில் வசித்து வரும் நிலையில் அவர்கள் மூலம் மனுதாரர் அழைப்பாணை பற்றி தகவல் தெரிந்திருக்கக்கூடும் என்றும், இருப்பினும் எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் R.C.O.P.No.2/2019 ல் ஆஜராகமல் இருந்த காரணத்தினால் மேற்படி மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மேலும் மனுதாரின் கணவர் காஜா கமாலுதீன் வழக்கு பட்டிகை கட்டிடத்தை மனுதாரருக்கு முஸ்லீம் முறையிலான வாய்மொழி தானம் (HIBA) மூலம் 22.08.2012 கொடுத்தார் என்பது உண்மையல்ல என்றும், உண்மையில் காஜாகமாலுதீன் 1வது எதிர்மனுதாரின் கணவர் என்றும், சாகுல்ஹமீது என்பவர் மனுதாரரின் கணவர் என்றும், மனுதாரருக்கும், சாகுல்ஹமீதுக்கும் இரண்டு மகன்கள் உள்ளனர் என்றும், 1வது எதிர்மனுதாரரின் கணவருக்கும், மனுதாரருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும், வழக்கு பட்டிகை சொத்தை அபகரிக்க வேண்டி கெட்ட எண்ணத்தில் உண்மைக்கு புறம்பாக மனுதாரரால் கூறப்படுகிறது என்றும், வாய்மொழி வாடகை ஒப்பந்தின் படி மனுதாரர் வாடகைதாரர் என்றும், 1வது எதிர்மனுதாரரே தபசில் கட்டிடத்தின் முழுமையான உரிமையாளர் என்றும், மனுதாரர் வாடகை ஒப்பந்த நிபந்தனையை மீறி உள் வாடகைக்கு மேற்படி 2,3 எதிர்மனுதாரர்களுக்கு கொடுத்த

காரணத்தினாலும், வாடகையை முறையாக செலுத்தாமல் வாடகை பாக்கி ஏற்படுத்திய காரணத்தினாலும், மனுதாரர் சட்டப்படியான வாடகைதாரர் அல்ல, மேலும், ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஏற்பட்ட கால தாமதம் 394 நாட்கள் ஆனால் மனுதாரரால் மனுவில் 390 நாட்கள் மட்டுமே கால தாமதம் ஏற்பட்டதாக தவறாக கூறப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் சுத்தமான கரங்களுடன் மாண்புமிகு நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், மனுதார் உண்மையை மறைத்து பொய்யான தகவல்களை கூறி மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனு நீதியின் நலன் கருதி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மேற்படி வழக்கில் எவ்விதமான முகாந்திரமும் இல்லை என்றும், 1வது எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை ஏற்று மேற்படி காலதாமத மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 1வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவின், 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் அஜராகாததால் 22.03.2022 அன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4) இம்மனுவின் மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் தரப்பில் ம.சா.1 மூலமாக ம.சா.ஆ–1 மற்றும் 2, எ.ம.சா.1 ன் குறுக்கு விசாரணையின் போது ம.சா.ஆ–3 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1வது எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக சாட்சியம்அளித்துள்ளார். 1வது எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>தீர்வுக்குறிய பிரச்சனை</u> :

இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

6) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, இரு தரப்பு சாட்சி சான்றாவணங்கள் அசல் மனு கோப்பு, E.P.No.19/2020 ன் கோப்பு மற்றும் இருதரப்பு வாத உரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

7) இம்மனுவானது, மனுதாரர்/1 வது எதிர்மனுதாரரால் R.C.O.P.No.2/2019 ல் கடந்த 31.01.2020 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்துசெய்யக் கோரி மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 390 நாள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) இம்மனுவின் மனுதாரர் R.C.O.P.No.2/2019 ன் 1வது எதிர்மனுதாரர் என்பதும், இம்மனுவின் 1வது எதிர்மனுதாரர் R.C.O.P.No.2/2019 ன் மனுதாரர் என்பதும், R.C.O.P.No.2/2019 ன் எதிர்மனுதார்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 09.08.2019 ல் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, பின்னர் 31.01.2020 அன்று ஒருதலைபட்ச உத்தரவானது R.C.O.P.No.2/2019 ல் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது என்பதும், மேற்படி உத்தரவை நிறைவேற்ற இம்மனுவின் 1 வதுஎதிர்மனுதாரர்/மனுதாரரால் E.P.No.19/2020, 23.06.2020 ல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி E.P.No.19/2020 ன் அறிவிப்பானது இம்மனுவின் மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டு 10.02.2021 ல் இம்மனுவின் மனுதாரரின் தரப்பில் அவரது வழக்கறிஞரால் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் மற்றும் 1 வது எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும்.

9) இந்நீதிமன்ற R.C.O.P.No.2/2019 ன் கோப்பின் பரிசீலனையில் இருந்து, மேற்படி வாடகை கட்டுப்பாட்டு அசல் மனுவானது 14.11.2018 ல் இந்நீதிமன்றத்தில் 1வது எதிர்மனுதாரர்/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு,

09.02.2019 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.03.2019 அன்று ஒத்தி வைக்கப்பட்டு, அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை என்பதால் 13.03.2019 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

10) மேலும், R.C.O.P.No.2/2019 ன் கோப்பின் பரிசீலனையில் இருந்து, R.C.O.P.No.2/2019 ல் 1 வது எதிர்மனுதாரரான இம்மனுவின் மனுதாரருக்கு 12.03.2019 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அனுப்பப்பட்ட நீதிமன்ற அறிவிப்பானது (court notice) "not seen affixed" என்றும், தபால் அறிவிப்பானது (Postal notice) "left India" என திருப்பப்பட்டிருப்பதையும், அதன் பிறகு அசல் மனு 24.04.2019, 28.06.2019 ஆகிய தினங்களில் ஒத்திவைக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 28.06.2019 ல் உரிமையியல் நடைமுறை சட்ட கட்டளை 5 விதி 20 ன் கீழாக தமிழ் தினசரி மாலை மலர் அல்லது தினமலரில் பொதுஅறிவிப்பு வெளியிடும்படி உத்தரவிடப்பட்டதன் பேரில் 09.08.2019 அன்று 1 வது எதிர்மனுதாரரால் செய்திதாளில் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டும், R.C.O.P.No.2/2019 ன் எதிர்மனுதார்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 09.08.2019 ல் இம்மனுவின் மனுதாரர்/1 வது எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டு, பின்னர் 31.01.2020 அன்று ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

11) மேலும், இந்நீதிமன்ற E.P.No.19/2020 ன் கோப்பின் பரிசீலனையில் இருந்து, இம்மனுவின் 1 வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட E.P.No.19/2020 ன் அறிவிப்பானது இம்மனுவின் மனுதாரருக்கு 09.02.2021 ல் சார்பு செய்யப்பட்டு, 10.02.2021 ல் இம்மனுவின் மனுதாரரின் வழக்கறிஞரால்

E.P.No.19/2020 ல் வக்காலத்து தாக்கல் செய்ப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

12) இந்நிலையில், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட மா.சா.ஆ.1 ஆன மனுதாரின் கடவு சீட்டின் (Passport) ஒளி நகலின் பரிசீலனையில் இருந்து, இம்மனுவின் மனுதாரர் 01.09.2018 முதல் 26.05.2019 வரை நியூசிலாந்து நாட்டில் இருந்திருப்பதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

13) மேற்கண்ட ம.சா.ஆ.1ன் பரிசீலனையில் இருந்து, இம்மனுவின் மனுதாரர் 01.09.2018 முதல் 26.05.2019 வரை நியூசிலாந்து நாட்டில் இருந்திருப்பதால் மனுதாரருக்கு தனக்கு எதிராக R.C.O.P.No.2/2019 தாக்கல்செய்யப்பட்டு நடைபெற்று வருவது பற்றி அறிந்திருக்கும் வாய்ப்பு இல்லை என்பதை அறியமுடிகிறது.

14) இம்மனுவின் 1வது எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட E.P.No.19/2020 ன் அறிவிப்பானது, இம்மனுவின் மனுதாரருக்கு 09.02.2021 ல் சார்பு செய்யப்பட்ட பின்னரே இம்மனுவின் மனுதாரருக்கு R.C.O.P.No.2/2019 பற்றி தெரியவந்தது என மனுதாரர் மனுவில் கூறுவது உண்மை என்பதை மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

15) இம்மனுவின் 1 வது எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரின் இளைய மகன் முகமது சாகின் அவருடைய மனைவி மற்றும் குழந்தைகளுடன் வழக்கு பட்டிகை சொத்தில் வசித்து வரும் நிலையில் அவர்கள் மூலம் மனுதாரர் அழைப்பாணை பற்றி தகவல் தெரிந்திருக்கக்கூடும் என கட்சி எடுக்கப்பட்ட போதிலும், மேற்படி சங்கதியை நிரூபணம் செய்ய 1வது எதிர்மனுதாரர் தரப்பில்

எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

16) மேலும், R.C.O.P.No.2/2019 ன் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்காகவும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், மேலும், இது போன்ற மனுக்களை விசாரணை நீதிமன்றங்கள் கடுமையான தன்மையுடன் அணுகாமல் தீர்மானிக்க வேண்டும் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றமும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும் பல்வேறு வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில் கீழமை நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தி இருப்பதாலும், மனுதாரர்/1வது எதிர்மனுதாரருக்கு மற்றொரு வாய்ப்பினை நீதியின் நலனை கருத்தில் கொண்டு வழங்கலாம் என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படபோவதில்லை.

17) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**18) இறுதியாக,**

இம்மனுவானது நீதியின் நலன் கருதி ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1வது எதிர்மனுதாரருக்கு 31.07.2024 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும்பட்சத்தில் இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 31.07.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம்

செய்யப்பட்டு, 2024ம் ஆண்டு ஜூலை திங்கள் 26ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M ALIMA

Digitally signed by M ALIMA
Date: 2024.07.26 15:54:34 +0530

வாடகை கட்டாள்கையர்/
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

1) **மனுதாரர் /1வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :**

ம.சா.1 – A.ரஸியா பேகம்

2) **மனுதாரர் /1வது எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | மனுதாரரின் கடவு சீட்டு – ஒளி நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டுள்ளது). |
| ம.சா.ஆ.2 | 01.09.2018<br>26.05.2019 | விமான பயண சீட்டுகள் – அசல்.( எண்ணம் 4) |
| ம.சா.ஆ.3 | 07.03.2023 | DVC No.12/2014ல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 ஆல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – நீதிமன்ற சான்றிட்ட நகல். |

3) **1வது எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சாட்சி :**

எ.ம.சா.1 – மைதீன் பீவி

4) **1வது எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை.

5) **2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள்/ 2வது மற்றும் 3வது எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

M ALIMA

Digitally signed by M ALIMA
Date: 2024.07.26 15:54:46 +0530

வாடகை கட்டாள்கையர்/
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
நாகர்கோவில்.

முு.கூ.மா.உ.நீ., நாகர்கோவில்.
இ.ம.எண்.2/2021 இன்
ஆர்.சி.ஓ.பி.எண்.2/2019
நாள் – 26.07.2024

**இடைநிலை மனு எண்.2/2021 இன்**
**வா.க.அ.மனு எண்.2/2019**

**நாள் – 26.07.2024**

உத்தரவு பகரப்பட்டது.

இறுதியாக, இம்மனுவானது நீதியின் நலன் கருதி ரூ.1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1வது எதிர்மனுதாரருக்கு 31.07.2024 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும்பட்சத்தில் இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 31.07.2024.

I ADM, NGL.